விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆடி - 22 சனி 07.08.2021 மலர் - 2, இதழ் - 123

# தயான் சந்த் கேல் ரத்னா



விஜயபாரதம்

விளையாட்டுத் துறைக்கென வழங்கப்படும் மிக உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது இனி 'ஹாக்கி மந்திரவாதி' என்று புகழப்படும் பாரத ஹாக்கி அணியின் தன்னிகரில்லா தயான் சந்த்தின் பெயரால் தயான் சந்த் கேல் ரத்னா விருதாக வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

அவரது டுவிட்டர் பதிவில், 'கேல் ரத்னா விருதுக்கு மேஜர் தயான் சந்த்தின் பெயரிட பாரதம் முழுவதிலுமிருந்து பல்லாயிரம் கோரிக்கைகள் வந்ததையடுத்து மக்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக கேல் ரத்னா விருது மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருது என்று அழைக்கப்படும்! ஜெய் ஹிந்த்' என தெரிவித்திருந்தார்.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், தயான் சந்த் ராணுவத்தில் பணியாற்றினார். அன்றைய ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர், தயான் சந்தின் திறமைகளால் மிகவும் ஈர்க்கப்பட்டார், அவருக்கு ஜெர்மன் குடியுரிமை, ஜெர்மன் ராணுவத்தில் கர்னல் பதவியை வழங்கினார். ஆனல், தாய்நாட்டுப் பற்றால் தயான் சந்த் இந்த வாய்ப்பை நிராகரித்தார்.

பாரதத்தின் மிகச்சிறந்த ஹாக்கி மேஸ்ட்ரோவான தயான் சந்த், அசாதாரணமாக கோல் அடிக்கும் திறமை கொண்டவர். 1928, 1932, 1936ம் ஆண்டுகளில், மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் பாரதத்திற்கு தங்கப் பதக்கங்களை வென்றுகொடுத்தவர்.

1926 முதல் 1949 வரை சர்வதேச ஹாக்கி போட்டிகளில் விளையாடினார். மொத்தம் 185 விளையாட்டுகளில் 570 கோல்களை அடித்தார். பாரத அரசு 1956ல் பாரதத்தின் மூன்றாவது மிக உயர்ந்த குடிமகனான பத்ம பூஷண் விருது அவருக்கு வழங்கப்பட்டது. அவரது பிறந்த நாளான ஆகஸ்ட் 29 தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்படுகிறது.

# எங்கெங்கு காணினும் தேசியக் கொடி



விஜயபாரதம்

2019 ஆகஸ்ட் 5 சுதந்திர பாரத வரலாற்றில் பொன் எழுத்துக்கள் கொண்டு எழுதப்பட்ட நன்னாள். அன்றுதான் அரசியல் சட்டப் பிரிவு 370 & 35A அகற்றப்பட்டது. 70 ஆண்டுகள் போராடிய தேசபக்தர்களின் கனவு நிறைவேறிய நாள் இது. இப்பிரிவினை சட்டம் அகற்றப்படுவதற்கு முன்பு ஜம்மு & காஷ்மீரில் மூவர்ண தேசியக் கொடி ஏற்ற முடியாது. அது பட்டொளி வீசிப் பறப்பதை காண முடியாது. சட்டப் பிரிவு 370 அகற்றப்பட்டதன் பலனை தற்போது ஜம்மு காஷ்மீர் எங்கும் காண முடிகிறது. மக்கள் அச்சமின்றி தேசியக் கொடியேற்றி மகிழ்ச்சியுடன் தேசபக்தியை வெளிப்படையாக பறைசாற்றினர்.

# நாடு திரும்பிய கலைப் பொருட்கள்



விஜயபாரதம்

மாநிலங்கள் அவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துபூர்வமாக பதில் அளித்த மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சர் ஜி கிஷன் ரெட்டி, 1976ம் ஆண்டு முதல் இதுவரை 54 பழங்கால பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 41 பொருட்கள் (அதாவது சுமார் 75% பொருட்கள்) பிரதமர் மோடியின் கடந்த 7 ஆண்டுகால ஆட்சியில் திருப்பிப் பெறப்பட்டவை. காங்கிரஸ் 25 ஆண்டுகால ஆட்சியில் 10க்கும் குறைவான தொல்பொருட்களை மீட்டுள்ளது. நேரு காந்தி குடும்பத்தின் அடுத்த தலைவர்கள் பாரதத்தின் கலாச்சாரம், நாகரீக செல்வத்தை பாதுகாப்பதை விட தங்களுக்கு செல்வத்தை குவிப்பதில் அதிக அக்கறை கொண்டிருந்தனர்' என தெரிவித்தார். மேலும், இந்த முயற்சியில் ஏ.எஸ்.ஐ, சி.பி.ஐ போன்ற பல்வேறு அமைப்புகளின் அயராத முயற்சிகளையும் ரெட்டி பாராட்டினார்.

# தபால் நிலையமா மிஷனரியா?



விஜயபாரதம்

குமரி மாவட்டம் புத்தளம் தபால் நிலையத்தில் திடீரென உள்ளே ஏசுவின் படம், காம்பௌண்ட் சுவர்களில் பைபிள் வசசனங்கள் இடம்பெற்றுள்ளன. இது அப்பகுதி மக்களிடையே சர்ச்சையை ஏற்படுத்தியது. இதை குறித்து அறிந்த அங்குள்ள ஹிந்து அமைப்புகள், அவற்றை உடனடியாக அப்புறப்படுத்தவும் அழிக்கவும் முற்றுகைப் போராட்டம் நடத்தின. அது ஒரு மத்திய அரசுக் கட்டடம், அதில் பணி புரிவோர் மத்திய அரசின் ஊழியர்கள்தானே தவிர மிஷனரி ஊழியர்கள் அல்ல என்பதை அங்குள்ளவர்கள் உணர வேண்டும்.




# கோவையில் ரயில் நிலையத்துக்கு பிளாட்டினம்

விஜயபாரதம்

சேலம் கோட்டத்தில் அதிக வருவாய் ஈட்டும் ரயில் நிலையமாக கோவை ரயில் நிலையம் விளங்குகிறது. ‘ஏ1’ அந்தஸ்து பெற்ற இந்த ரயில் நிலையம் ஐ.எஸ்.ஓ., தர மேலாண்மை சான்றிதழ், சுற்றுச்சூழல், பாதுகாப்பு சான்றிதழ்களை ஏற்கனவே பெற்றுள்ளது. ‘கிரீன் ரேசியோ’ எனப்படும் பசுமை தரமாக்கலில், கடந்த, 2018 முதல் கோவை ரயில் நிலைய வளாகத்தில் சூரியசக்தி மின்சாரம், மழை நீர் சேகரிப்பு, ‘மியாவாக்கி’ முறையில் மரம் நடுதல், 100 சதவீத எல்.இ.டி., விளக்குகள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், மினி பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பார்வையற்றோருக்கு பிரெய்லி போர்டுகள், நோயாளிகள், முதியோர் சென்று வர சாய்வு தளம், லிப்ட், தானியங்கி படிக்கட்டுகள், தாய்ப்பால் ஊட்டுவதற்கென தனி அறை என ஏராளமான சிறப்பு வசதிகள் கோவை இரயில் நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில், இந்தியன் கிரீன் பில்டிங் கவுன்சில் ஆய்வில் கட்டமைப்பு, ஆற்றல், நீர் மேலாண்மை என 6 பிரிவுகளில் 100க்கு, 83 புள்ளிகள் பெற்று தேசிய அளவில், ‘பிளாட்டினம்’ சான்றிதழை கோவை ரயில் நிலையம் பெற்றுள்ளது.

---



# நில அபகரிப்பு கூட்டணி

விஜயபாரதம்

சென்னை வில்லிவாக்கத்தில், தனியாக வசித்த முதியவரின் 5 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்தை அபகரிக்க முயன்ற வழக்கில் விடுதலை சிறுத்தை கட்சி பிரமுகர் தயாள மூர்த்தி, அம்பிகா, சுமதி, சினேகலதா உள்ளிட்டோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதேபோல, காஞ்சிபுரத்தில் டிராவல்ஸ் உரிமையாளரிடம் இருந்து 2 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளை அபகரித்த தி.மு.க பொதுக்குழு உறுப்பினர் சீனிவாசன், சந்தோஷ் கார்த்திக், சரவன பெருமாள் ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

---



# ரிசர்வ் வங்கி அறிவிப்பு

விஜயபாரதம்

ரிசர்வ் வங்கி கவர்னர் சக்திகாந்த தாஸ் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில், 'வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி விகிதங்களில் எந்தவித மாற்றமும் இல்லை. தற்போதுள்ள 4 சதவீத வட்டி விகிதமே தொடரும். ரிவர்ஸ் ரெப்போவும் 3.35 சதவிகிதமாக தொடரும். கொரோனா 2வது அலையின் தாக்கத்தில் இருந்து பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வருகிறது. 2021 2022ல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 9.5 சதவீதமாக இருக்கும். பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் நிதிக் கட்டமைப்பு செயல்படுத்தப்படுகிறது. வரும் 2022 23 முதல் காலாண்டு பணவீக்கம் 5.1 சதவிகிதமாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது' என தெரிவித்தார்.

# ராணுவ ஆடை தயாரிப்பில் திருநங்கைகள்



விஜயபாரதம்

திருநங்கையர் வாழ்வாதாரத்தை உயர்த்த, 'சகோதரன்' அமைப்பு சார்பில் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த அமைப்பு, 'இன்னர்வீல்' எனும் அமைப்புடன் இணைந்து 40க்கும் மேற்பட்ட திருநங்கையருக்கு, குளிர்கால ஆடை தயாரிப்பு பயிற்சி அளிக்கிறது. முதற்கட்டமாக 40 திருநங்கையர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற்ற திருநங்கையர், முதன் முதலில் உல்லன், 'ஸ்கார்ப்' தயாரித்து அதன்படி, தற்போது பயிற்சி பெற்ற 40 திருநங்கையர், குளிர்பிரதேசங்களில் சேவையாற்றும் ராணுவ வீரர்களுக்கு தேவையான உல்லர் 'ஸ்கார்ப்'களை தயாரித்து வருகின்றனர். மேலும் பல திருநங்கையருக்கு பயிற்சி அளித்து, அவர்கள் தயாரிக்கும் பொருட்களை ஏற்றுமதி செய்து, திருநங்கையரின் வாழ்வாதாரத்தை உயர்த்த திட்டமிட்டுள்ளது அந்த அமைப்பு.

# காதி காகிதத்துக்கு காப்புரிமை




விஜயபாரதம்

பிளாஸ்ட்டிக்கால் பூமிக்கு ஏற்படும் பாதிப்பை குறைக்க ஏதுவாக, பிளாஸ்ட்டிக் கழிவு, காகிதக்கூழ் கொண்டு கையால் தயாரிக்கப்படும் காகிதத்தை காதி கிராமத் தொழில்கள் ஆணையம் உருவாக்கியது. இந்திய அறிவுசார் சொத்துரிமை அமைப்பின் காப்புரிமை கட்டுப்பாட்டு அமைப்பால் இதற்கு காப்புரிமை அளிக்கப்பட்டுள்ளது. இதனைக் கொண்டு பைகள், கோப்பு உறைகள் உள்ளிட்டப் பல பொருட்களை இந்த ஆணையம் தயாரித்துள்ளது.



# ஆதர் பூனவல்லா நிதியுதவி

சீரம் நிறுவனம், ஆக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனிகாவின் கூட்டுத் தயாரிப்பான கோவிஷீல்ட் தடுப்பூசி, பாரத் பயோடெக் நிறுவனத்தின் கோவாக்சினுக்கும் இன்னும் சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவில்லை. இதனால் இந்த தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்ட பாரத தேசத்தவர்கள் வெளிநாடுகளில் சுதந்திரமாகப் பயணிக்க அனுமதிக்கப் படுவதில்லை. கட்டாய தனிமைப்படுத்தல் நடைமுறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதற்கான நிதி உதவியை வழங்க சீரம் நிறுவனத்தின் சி.இ.ஓ ஆதர் பூனவல்லா முன்வந்துள்ளார். இதற்காக அவர் ரூ.10 கோடி ஒதுக்கியுள்ளார். வெளிநாடுகளில் படிக்கும் இந்திய மாணவர்கள் தனிமைப்படுத்தல் நடைமுறைகளுக்கான செலவுகளுக்கு நிதி உதவி பெற இந்தத் திட்டத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

# விமானப் போக்குவரத்தில் இழப்பு



விஜயபாரதம்

கொரோனா பரவலால் கடந்தாண்டு மார்ச் முதல் விமான போக்குவரத்து சேவை முற்றிலுமாக முடங்கியது. மத்திய அரசின், 'வந்தே பாரத்' திட்டத்தின் கீழ் சிறப்பு பயணியர் விமானங்கள் மட்டும் இயங்கின. கொரோனாவுக்கு முன்பு இருந்ததை விட, தற்போது 85 சதவீதம் பயணியர் விமான போக்குவரத்து வீழ்ச்சி அடைந்துள்ளது. இதன் காரணமாக விமான போக்குவரத்து துறை வரலாறு காணாத இழப்பை சந்தித்துள்ளது. நம் நாட்டைச் சேர்ந்த விமான நிறுவனங்கள் 2020 21ம் நிதியாண்டில் 19 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பை சந்தித்துள்ளன. விமான நிலையங்களுக்கு 3,400 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. தடுப்பூசி போட்டுக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, பல நாடுகளில் பயண தடை விலக்கி கொள்ளப்படுவது போன்றவற்றால் விமான சேவைகள் சீரடையத் துவங்கி உள்ளன. எனவே, அடுத்து வரும் ஆண்டுகளில் வளர்ச்சி இரட்டிப்பாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

# சாலைகளில் மின்சார உற்பத்தி



விஜயபாரதம்

தேசிய நெடுஞ்சாலைகளுக்கு சொந்தமான இடங்கள், கட்டிடங்கள், டோல் பிளாசாக்களின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி தகடுகளை பொருத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை, போக்குவரத்து, நெடுஞ்சாலை சேவைகளுக்கு பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான சாத்தியங்களை ஆய்வு செய்ய மத்திய மின்துறை அமைச்சகத்தின் இ.இ.எஸ்.எல் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக நாக்பூர் பைபாஸ் சாலை, சோலாப்பூர் யெல்ஷி ஆகிய இடங்களில் டோல் பிளாசாக்களின் கூரைகள், சத்தீஸ்கர் எல்லையில் உள்ள வைகங்கா பாலம் ஆகியவற்றில் சூரிய மின்சக்தி தகடுகள் பொருத்தப்பட்டுள்ளன என மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் நிதின் கட்கரி கூறியுள்ளார். மேலும், 'கடந்த 2018ல் 124 ஆக இருந்த, மின்சார வாகனங்களின் பதிவு, தற்போது 1,356 என அதிகரித்துள்ளது. சரக்கு போக்குவரத்துக்கான மின்சார வாகனங்களின் எண்ணிக்கை கடந்த 2018ல் 6246 ஆக இருந்தது. அது தற்போது 27,645 ஆக உயர்ந்துள்ளது. திரவ நிலை இயற்கை எரிவாயுவின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து வரும் 2030க்குள், எரிபொருளில் திரவ எரிவாயு கலப்பு 15 சதவீதம்வரை அதிகரிக்க மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பள்ளிகளை கட்டிய நக்சல்கள்



விஜயபாரதம்

சத்தீஸ்கர் மாநிலம், தண்டேவாடா மாவட்டம், பான்சி மாசபாரா கிராமத்தில் நக்சல்களால் 6 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பள்ளிக் கட்டடம் இடிக்கப்பட்டது. தற்போது சரணடைந்த இவர்கள் அப்பள்ளியை மீண்டும் கட்டி, புதிய வண்ணம் தீட்டி புத்துயிர் அளித்துள்ளனர். அவர்கள் சரணடைந்தபோது, என்ன செய்ய விரும்புகிறீர் கள் என அவர்களிடம் கேட்கப்பட்டது. அப்போது அவர்கள் இடித்த பள்ளிக் கட்டடத்தை மீண்டும் கட்டுவதில் ஈடுபட்டு, அதிலிருந்து வரும் கூலித் தொகையில் தங்கள் வாழ்க்கையை துவங்க விரும்புவதாகக் கூறினர். பள்ளி கட்டுமானப் பணிக்கு மாவட்ட நிர்வாகம் உடனடியாக ஒப்புதல் வழங்கியது. தற்போது இப்பள்ளி கட்டி முடிக்கப்பட்டு, மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. அவர்கள் தற்போது பள்ளிக்கு ஒரு சாலையையும் புதிய அங்கன்வாடி மையத்தையும் கட்டி வருகின்றனர்.

# சைலன்ஸர்கள் அழிப்பு



விஜயபாரதம்

அதிக சப்தம் வெளிப்படும் வகையிலான சைலன்ஸர்களை இளைஞர்கள் தங்களுடைய இருசக்கர வாகனங்களில் பொருத்தி வீதி வலம் வருவது அதிகரித்து வருகிறது. இதனால் ஒலி மாசு அதிகரித்தல், மக்களுக்கு இடையூறு, குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிரமம் என பல தொல்லைகள் ஏற்படுகிறது. இந்நிலையில், ஆந்திர மாநிலம் திருப்பதியின் எஸ்.பி வெங்கட்ட அப்பல நாயுடு உத்தரவின்பேரில் காவலர்கள் அதிக சப்தத்தை வெளிப்படுத்தும் வகையிலான சைலன்ஸர் பொருத்தப்பட்ட ராயல் என்ஃபீல்டு புல்லட் உள்ளிட்ட இருசக்கர வாகனங்களை பறிமுதல் செய்து அவற்றில் பொருத்தப்பட்டிருக்கும் சைலன்சர்களை தனியாக கழற்றி எடுத்தனர். பின்னர் அவற்றை ரோடு ரோலர் ஏற்றி அழித்தனர். இதுபோன்ற விஷயங்களில், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மேல் கவனம் செலுத்தவும் அக்கறை காட்டவும் எஸ்.பி வெங்கட அப்பல நாயுடு வேண்டுகோள் விடுத்தார்.


# விஷ்ணு சிலை மீட்பு



விஜயபாரதம்

வங்கதேசத்தில் குமிலா மாவட்டத்தில் 1,000 ஆண்டுகள் பழமையான விஷ்ணுவின் கருங்கல் சிலை மீட்கப்பட்டுள்ளது. ஆசிரியர் ஒருவர் வீட்டில் இருந்து இந்த சிலை மீட்கப்பட்டுள்ளது. கிராமத்தில் குளம் தோண்டும்போது இந்த சிலை கிடைத்ததாகவும் அவர் அது குறித்து காவல்துறைக்கு தெரிவிக்காமல் வீட்டில் வைத்திருந்ததாகவும் தெரிகிறது. இதனையடுத்து வங்கதேச காவல்துறை சிலையை மீட்டது. அந்த ஆசிரியர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

# பாகிஸ்தானுக்கு பாரதம் கண்டனம்



பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள போங்க் நகரில் 100க்கும் மேற்பட்ட ஹிந்து குடும்பங்கள் வசிக்கின்றன. சில நாட்களுக்குமுன், அப்பகுதியைச் சேர்ந்த முஸ்லிம்கள் கூட்டமாக சென்று அங்குள்ள வினாயகர் கோயில் மீது தாக்குதல் நடத்தினர். கடவுள் சிலைகளையும் சேதப்படுத்தியுள்ளனர். கோயிலின் ஒரு பகுதிக்கு தீ வைக்கப்பட்டது. காவல்துறையால் நிலைமையை கட்டுப்படுத்த முடியவில்லை என்பதால் ராணுவம் வரவழைக்கப்பட்டது. இந்த அராஜகத்தை நியாயப்படுத்த அங்குள்ள முஸ்லிம் வழிபாட்டு தலத்தின் நூலகத்தின் காம்பௌண்ட் சுவற்றில் 8 வயது ஹிந்து சிறுவன் சிறுநீர் கழித்தான் என வன்முறையாளர்கள் ஒரு காரணம் கற்பித்தனர். பாகிஸ்தானின் உயர்மட்ட தூதுவரை அழைத்து இந்த செயலுக்கு பாரதம் தனது கண்டனத்தை பாரதம் தெரிவித்துள்ளது. உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்குமாறும் கூறியது. பாகிஸ்தான், அதன் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி கூறினார். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் தனது டுவிட்டர் பதிவில், இந்த சம்பவத்தை கண்டித்ததுடன் பாகிஸ்தான் அரசு அக்கோயிலை புனரமைக்கும் என்று உறுதியளித்தார், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறியுள்ளார்.

விஜயபாரதம்

# அமெரிக்க ஆசியர்கள் மொழி

ஆசிய அமெரிக்க நீதி மையத்தின் தலைவர் ஜான் யங், 'அமெரிக்காவில் வசிக்கும் ஆசிய வம்சாவளியினரில் மூன்றில் இருவர் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள். இவர்களில் 52 சதவீதம் பேருக்கு ஆங்கிலத்தில் பேசும் ஆற்றல் குறைவு. இவர்கள் சீனாவின் மாண்டரின், பிலிப்பைன்சின் தகலக், கொரியா, வியட்னாமிஸ், ஹிந்தி ஆகிய மொழிகளை அதிகம் பேசுகின்றனர். கொரோனாவால் அமெரிக்காவில் வசிக்கும் ஆசிய நாட்டவர்களின் சுகாதாரம், நிதி ஆதாரம், வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. கொரோனா பரவலுக்கு ஆசியா காரணம் என்ற கருத்தால் நிறவெறி வன்முறைக்கும் ஆளாகியுள்ளனர்' என தெரிவித்துள்ளார்.

விஜயபாரதம்



# வலையில் சிக்கிய மீம்கள்











அதுல பாருங்க சம்மந்தி...
தன்னுடைய தொலைப்பேசிய
ஒட்டுக்கேட்டதா சொன்ன எவனும்
போலிஸ் ஸ்டேசன்ல
கம்பிளெயின்ட்டே குடுக்கலியாமே !!!



# விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# ரவிந்தரநாத் தாகூர்

ரவீந்திரநாத் தாகூர் ஒரு கவிஞர், தத்துவஞானி, இசையமைப்பாளர், எழுத்தாளர், மற்றும் ஒரு கல்வியாளரும் கூட. 1913ல், அவரது கவிதைத் தொகுப்பான 'கீதாஞ்சலி' என்ற படைப்புக்காக, நோபல் பரிசு வென்று, ஆசியாவின் முதல் நோபல் பரிசு பெற்றவர் என்ற பெருமையைத் தட்டிச் சென்றவர். ரவீந்திரநாத் தாகூர் பலரால் 'குருதேவ்' என்றும் அழைக்கப்பட்டார்.


விஜயபாரதம்

ரவீந்திரநாத் தாகூர், கல்கத்தாவில் ஒரு பணக்கார பிராமண குடும்பத்தில் தேவேந்திரநாத் சாரதா தேவி தம்பதியருக்கு ஒன்பதாவது மகனாக பிறந்தார். பலருடைய சுயசரிதைகள் மற்றும் வரலாறுகளைக் கற்றதுடன், வீட்டிலேயே வானியல், அறிவியல், சமஸ்கிருதம் படித்தார். காளிதாசரின் கவிதைகளையும் கற்றார். ஷேக்ஸ்பியர் மற்றும் பிறரது ஆக்கங்களை ஆராய்வதிலேயே ஆர்வம் காட்டியதால், பட்டம் பெறாமலேயே 1880ல் வங்கத்திற்குத் திரும்பினார். பின்னர் ஒரு கவிஞராகவும், எழுத்தாளராகவும் தனது வாழ்க்கையைத் தொடங்கினார்.

தாகூர், 1883 ஆம் ஆண்டில் டிசம்பர் 9ஆம் தேதி மிருனாலி தேவி ராய்சௌத்ரி என்ற பெண்ணை மணந்தார். அவர்களுக்கு இரண்டு மகன்கள், மூன்று மகள்கள் என ஐந்து குழந்தைகள் பிறந்தனர்.

அவரது பிரபலமான இசைதட்டுகள் அனைத்தும் 'ரவீந்திர சங்கீத்' என்ற பேரில் அழைக்கப்பட்டன. இவர் இயற்றிய ரவீந்திர சங்கீத் நியதியிலுள்ள இரண்டு பாடல்களான "ஜன கண மன" மற்றும் "அமர் சோனார்", பாரதம் மற்றும் வங்காளத்தின் தேசிய கீதங்களாக உள்ளது.

ரவீந்திரநாத் தாகூர், 1884ல், 'கோரி ஓ கமல்' என்ற கவிதைத் தொகுப்பையும் 'ராஜா ஓ ராணி','விசர்ஜன்' என்ற நாடகங்களையும் எழுதினார். 1893 முதல் 1900வரை ஏழு கவிதைத் தொகுதிகளான 'சொனார் தொரி''கனிகா' போன்றவற்றை எழுதியுள்ளார். 1901ல் பங்கதர்ஷன் என்ற இதழின் ஆசிரியரானார். 1902ல் அவரது மனைவி இறந்தார். தன் மனைவிக்காக 'ஸ்மரன்' என்ர கவிதைத் தொகுப்பை அர்ப்பணித்தார்.

தாகூர், சாந்திநிகேதனில் 'போல்பூர் பிராமசார்யாஸ்ரமம்' என்ற ஆசிரம முறையிலான பள்ளியைத் துவங்கினார். 1921ல் விஸ்வபாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார். தனது புத்தகங்களுக்காகக் கிடைத்த நோபல் பரிசின் மூலமாகக் கிடைத்த உரிமைத்தொகை அனைத்தையும் இந்த பல்கலைக்கழகத்திற்காக கொடுத்தார். நீண்ட காலம் நோய்வாய்பட்ட ரவீந்திரநாத் தாகூர் அவர்கள், கல்கத்தாவிலுள்ள ஆகஸ்ட் 7, 1941 அன்று காலமானார்.